

நெடுந்தீவு மேற்கு ஐந்தாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்
முக்கொம்பன் பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி காமாட்சி சுந்தரம்

## அவர்களின் சிவபதப்பேறு குறித்த
## 31ஆம் நாள் நினைவு மலர்

## 2018.02.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



என்றும் இந்த நினைவமுதம்

எமது குடும்ப விளக்காகச் சுடர்

விட்டு பிரகாசித்து இவ்வுலகில்

நல்வாழ்வு வாழ்ந்து எம்மை

அன்போடும் பண்போடும் பாசத்தோடும்

பேணிப்பாதுகாத்து நல்வழி நடத்தி

ஒற்றார் உறவினர் நண்பர்கள்

அயலவர்களின் நன்மதிப்பிற்கும்

அன்பிற்கும் பாத்திரமாக விளங்கி


அனைவர் நெஞ்சங்களிலும் தனக்கென ஓர்

தனியான இடத்தைப் பெற்றுக்கொண்ட

எமது குலவிளக்கின் பொற்பாதங்களில்

இம் மலரை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்
1937.11.21

காலன் மடியில்
2018.01.26

அமரர்

# திருமதி.காமாட்சி சுந்தரம்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு ஏவிளம்பிதனில் ஆனதொரு தைபதின்மூன்றில்
பூண்டதொரு பூர்வபட்ச தசமிதனில் - நீண்டபுகழ்
காமாட்சியெனும் தெய்வபக்தி நிறை காரிகையாள்
இறை பதமடைந்த நன்நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை துதிப்பாக்கள்



## விநாயகர் துதி

பிடியதனுருவுமை கொள மிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடும் அவரிடம்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே

# பஞ்ச தோத்திரம்

## தேவாரம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே நற் சோதி மிக்க
உருவே யென் னுறவேயென் னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ணம்
ஆவடு நண்டுறையுறையு மமரரேறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற்
காப்பானை யேத்தாதே
சுழ்கின்றாய் கேடுனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக்
கடலாய் வெள்ளத்தே

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையுந் துன்று
பொற்குழற் றிருச் சடையும்
திவள மாளிகை சூழ் தரு தில்லையுட்
திரு நடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறு எமன் மனந்
தழன் மெழு கொக்கின்றதே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
ஆணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியுமாடியும்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

சிவனடியே சிந்திக்குத் திருப் பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தர முணர்ந்தார் அந்நிலையில்

# திருப்புகழ்

உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் நுணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் கானநிலைப் பொருளோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானை முகப் பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவறையில் இருந்து கல்லறைவரை
# அமரர் திருமதி காமாட்சி சுந்தரம்
# அவர்களின் வாழ்க்கைச் சுவடு

இந்து சமுத்திரத்தின் முத்து நாடாம், இயற்கை அழகு நிறைந்த நாடாம், பண்பாடி பரிசு பல பெற்ற நாடாம், பல்லவர் ஆண்ட நாடான இலங்கையிலே வடபால் அமைந்திருக்கும் ஊராம் வண்ணக்கடல் அலைகள் தாலாட்டும் வயலோரம் நண்டினம் நடைபயில நெடுநாரை கோலமிடும் நெடுந்தீவு தனில் ஏர் பிடித்து நிலமுழுது ஏராளம் குலம் காக்கும் முருகேசு செல்லம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியாக இப் புவிதனிலே 1937 தனில் வந்துதித்தார். மூத்த மகளாய் காமாட்சியும் இவரின் உடன்பிறப்புக்களான குணம், ராசம்மா, பவளம், காலம் சென்ற ராணி, தவம், அமரர் சிவம் ஆகியோருடன் குடும்பத்தில் குதூகலமாய் வாழ்ந்தனர். சுறுசுறுப்பு மிக்க மகள் காமாட்சி தனது ஆரம்பக் கல்விதனை நெடுந்தீவுப் பாடசாலையிலும் உயர் கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியிலும் கற்று வந்தார்.

முத்த மகள் காமாட்சியின் இளமைப்பருவம் கண்ட குடும்பத்தினர் தக்கமானதொரு மருமகனை தானும் தேட எண்ணி அவ்வூரைச் சேர்ந்த முறை மைத்துனனான வல்லிபுரம் கதிராசிப்பிள்ளையின் மூத்த மகன் சுந்தரத்தை எல்லோரின் விருப்புடனும் 1953.04.13 இல் மணம் முடித்தார். இல்லற வாழ்க்கை தனை சிறப்புடனே நடாத்திய தம்பதியினரின் நற்பயனாய் 1954 இல் ஏக புத்திரனாய் நெடுந்தீவில் அவதரித்தான் நாதன். சீரும் சிறப்புடனும் வளர்வதைக் கண்ட காமாட்சி தம்பதியினர் விவசாயத்தினை மேற்கொள்ள எண்ணி வன்னேரிக்குளம் என்னும் ஊரில் குடியேறி தம் தொழிலில் முன்னேற்றம் கண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமாட்சி வீட்டில் மட்டுமன்றி ஊரிலும் உத்தமியாய் வாழ்ந்து வந்தாள். இவர்கள் வன்னேரிப்பிள்ளையார் ஆலய நிர்வாகியாகவும் பல அர்ப்பணிப்புக்களை செய்து வந்த வேளை தனில் தான்தோன்றி ஈஸ்வரியாய் முத்துமாரி அம்மன் வன்னேரியில் அவதரித்து இவர்களின் கண்களில் காட்சி கொடுத்தாள். இவ்வாலய திருப்பணிகளை திறப்படவே நிகழ்த்தி தேவியின் அருட்கடாட்சத்தைப் பெற்று மென்மேலும் மிளிர்ந்த குடும்பத்தினரை அயலவர், உறவினர் அனைவரும் போற்றினர். அது மட்டுமன்றி அவ்வூரில் உள்ள அடியவர்களுக்கு தீராத வினை தீர்க்கும் தெய்வமாகவும் திகழ்ந்த முத்துமாரிக்கு காமாட்சியே பூசைகளை ஒழுங்கு முறைப்படி செய்து அம்மனின் அருளினால் சீரும் சிறப்புடன் இருந்தனர்.

இவ்வாலயத்தில் பங்குனி வேள்வி, வைகாசி விசாகப் பொங்கல், ஆடிப்பூரம், கௌரிக்காப்பு மற்றும் அம்மனின் தினம் கருதி பல்வேறு விசேட ஆராதனைகளை நடத்தி அவ்வூரையும், அவ்வூர் மக்களையும், குடும்பத்தையும் அம்மனின் அருளால் அன்றும் இன்றும் திகழவைக்கும் தக்க புகழ் பூத்த பெருமை காமாட்சி குடும்பத்தையே சாரும்.

இவ்வாறு வாழ்ந்து வரும் வேளையில் மூத்த மகளாய் 1955இல் தேவியும் அவதரித்தாள். அடுத்த மகள் 1957இல் மல்லிகாவையும் பெற்று மனமகிழ்ந்து வாழ்ந்தனர். இவர்களின் மழலை மொழியில் முகம் மலர்ந்தவர்கள் நான்காவது மகளாக 1960இல் அமரர் இந்திராவை பெற்றெடுத்தனர். பால் சொரிந்து பூச்சொரிந்து பல்லாக்கில் பவனிவரும் அம்மனின் அருள் ஓங்கிடவே இல்லறத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளிர்ந்த இவர்களுக்கு ஐந்தாவது மகளாக றஞ்சியையும் ஆறாவது மகனாக அமரர் உதயகுணநாதனும் உதயமாகி ஐந்தாவது அகவைதனில் மறைந்திடவே மனம் நொந்த காமாட்சி மனம் தேற்றிடவே அடுத்த மகளாக சித்திராவை பெற்றெடுத்தனர். அடுத்த மகன் சீலனை நாதனுக்குத் துணையாக பெற்றெடுத்தார். இன்னல் எதுவும் இன்றி அம்மன் அருளால் இனிமையாய் வாழ்ந்த குடும்பத்தினருக்கு இரட்டைப் பெண்கள் என கௌரியையும், கெங்காவையும் இப் புவிதனிலே அவதரிக்க கடைசி மகளாய் மஞ்சுவும் கன்னியமாய் பிறந்திடவே இறைவன் அருளால் இனிய மகன் சக்தியும் என ஆறு இரண்டு பன்னிருவர் பண்புடன் வளர்ந்து பல கலைகளையும் கற்று பள்ளி வாழ்க்கையில் சீர் பெருக வாழ்ந்தார்கள்.

மணப்பருவம் அடைந்த தேவியை மாணிக்கவாசகம் என்னும் இளைஞனுக்கு மணம் முடித்து வைத்து இவர்களின் இல்வாழ்வில் சுதன், முரளி, வண்ணன், ரூபன், ரூபி, கீசன் ஆகிய ஆறு பிள்ளைகளைப் பெற்று அன்புடனே வாழ்ந்து வந்தனர். சுதனையும், முரளியையும் காமாட்சி குடும்பத்தினர் தனது மூத்த பேரப்பிள்ளைகள் என்பதால் மிகவும் செல்லமாக தானே தன் வீட்டில் வளர்த்தனர். இவர்களில் சுதன் தந்தை சொல் மந்திரம் என்று ஐயம் ஏதும் இன்றி வெளிநாட்டு மோகம் கொண்டு லண்டன் சென்று இறுதிவரை தன் கடமைகளை சரிவர செய்து நாளும் பொழுதும் அங்கிருந்து தொலைபேசி தனில் சுயநலன்களை அறிந்து மகிழ்வான்.

மூத்த மகன் நாதனுக்கு வள்ளிப்பிள்ளை என்னும் நங்கையை மணம் முடித்து வைத்தனர். அவர்கள் வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் யேந்தன், அமரர் நந்தன், கீத்தா, றீத்தா ஆகியோர் இப்புவிதனிலே அவதரித்தனர்.

அடுத்த மகள் மல்லிகாவை வெளிநாடு அனுப்பிவைத்து மல்லிகாவை அருந்தவநாதன் என்னும் அருமை மருமகனை ஏற்ற துணைவர் என எண்ணி பாங்குடனே மணம் முடித்து வைத்தனர். இவர்களின் பலனாக அஸ்வினி, ஆரதி, என்னும் இரு புத்திரிகளை அன்புடன் பெற்றெடுத்தனர். அயல் நாட்டில் வாழ்ந்தாலும் தன் தாய், தந்தை, சகோதரரை அன்புடன் வழிகூறி நிதம் பணம் தனை வாரிவழங்கும் வள்ளல் அவள்.

பிள்ளைகளில் இந்திராவை சுரேஸ் என்னும் நற்குணமுடையோனுக்கு மணம் முடித்து வைக்க நிறஞ்சன், கஜந்தன் என்னும் இரு புதல்வர்களுடன் கொழும்பில் வாழ்ந்துவந்த வேளை பொல்லாத காலனவன் பொறுக்காது தூதனுப்பி இந்திராவை 2009.04.26 இல் விண்ணுலகிற்கு அழைத்துவிட்டான். துயர் கண்ட காமாட்சி குடும்பத்தினர் சேர்ந்து ஒரு முறை வாடிவிட சுற்றத்தார் கூடி நிதம் பலவாறு தேற்றினர்.

அடுத்த மகள் றஞ்சியை துடிப்புடைய மருமகனாம் துரைராசாவை வனப்புடனே மணம் முடித்து வைக்க வந்துதித்தனர் துர்க்கா, நேசன், செந்தா, திவா. இவர்களில் துர்க்கா, நேசன் ஆகிய பேரப்பிள்ளைகளை காமாட்சியே தன் அரவணைப்பில் வளர்த்து வந்தார். இவ்வாறாக பேரப்பிள்ளைகளின் இன்பத்தில் மூழ்கிய காமாட்சி குடும்பத்தினர் முன்னேற்றம் காண்பதற்காய் 1972இல் முட்கொம்பனில் குடியேறி விவசாயம் செய்திடவே நல்ல பலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று வாழ்ந்த வேளை யானை வருகிறது என்று ஆனைமுகத்தானை முக்கொம்பனில் உள்ள வீட்டின் அருகே வைத்து வணங்கி வந்தார்கள். பிள்ளைகளின் கல்வித் தேவைக்காக நல்லூரிலும் சிலகாலம் வாழ்ந்து வந்தார்கள்.

அடுத்த மகள் சித்திராவை கனகராசா என்னும் கணவரைத் தோடி மாலையிட்டதன் பயனாய் சுரேஸ், சயானா இருவர் அவதரித்தனர். அவர்களுடன் இன்பமாக வாழ்ந்த வேளையிலே தாய், தந்தைக்கு உறுதுணையாய் தக்கதொரு மகனாக சிந்தை மிக்க சீலன் அவன் சிறப்புடனே விவசாயம் செய்து வந்த வேளையில் அவ்வூரைச் சேர்ந்த வந்தோரை வரவேற்று உபசரிக்கும் நற்குணம் மிக்க எழில் அமிர்தாவை மணம் முடித்து மூன்று முத்துக்களான கணேஷ், தர்சி, தர்மி ஆகியோரைப் பெற்றெடுத்தனர்.

அடுத்த மகள் கௌரியை கார்த்திகேசு என்னும் மணவாளனை மாலையிட்டு டெல்சிகா, கார்தீபன் இருவரைப் பெற்றெடுத்தனர். அன்புடனே அனைவரும் கூடி வாழ்ந்த வேளை அடுத்த மகளாம் கெங்காவை ஸ்ரீகுணராசாவிற்கு மாலையிட்டதன் பயனாய் வினோ, அனோ, இந்துஷன், இந்துஷா, ஆதவன் ஆகியோர் வந்துதித்தனர்.

அனைவரும் ஒன்று கூடி கடைசி மகள் மஞ்சிற்கு கருணசிங்கம் என்னும் மணவாளனை முடித்து வைக்க குமணன், தேனுஜா வந்துதித்தனர். இவர்கள் அனைவரதும் வாழ்வு கண்டு மகிழ்ந்த காமாட்சி குடும்பத்தினர் முத்துமாரி அம்மன் தனை காட்டுவழி நடந்து களிப்புடனே அம்மனுக்கு பூசைகள் தினம் செய்து வரும் பூரிப்பான காமாட்சி குடும்பத்தினரும் இன்பமாய் வாழ்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி மகன் சக்தி சுசீலாவை கன்னியமாய் மாலையிட்டு சபிதன் என்னும் மகனைப் பெற்று சந்தோசமாய் வாழ்ந்தனரே. காமாட்சி சுந்தரம் குடும்பத்தினர் தமது வம்சத்தை எண்ணி மகிழ்ந்து பேசிடுவார். முத்துமாரி அம்மனின் அருளால் அல்லல் ஏதுமின்றி வாழ்ந்தார்கள்.

நாட்டில் இடம் பெற்ற இடப்பெயர்வால் இடம் பெயர்ந்து மீண்டும் முக்கொம்பனில் இன்பமுற்று பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அயலவர்கள் என்று பெரிய சுற்றத்துடன் மகிழ்ந்த வேளை 2013.03.23 அன்று தனது அன்புக் கணவரான சுந்தரத்தை காலனவன் பறித்து விட பின்பு தனிமையால் வாடி வாழ்ந்த வேளை காமாட்சி தனது குலதெய்வம் முத்துமாரி அம்மன் வீற்றிருந்த கோவில் மீது அளவில்லாத பக்திதனைக் கொண்டிருந்தவர். திருவிழாக்களை செய்தே எமது வாழுகின்ற வம்சத்திற்கு வரங்கள் சேர்த்தார். பல் செல்வம் பெற்று அவனிதனில் காமாட்சி அம்மனாய் பவனி வந்தார். செல்வச் செழிப்புடனே இன்புற்றாலும் வயோதிபத்தின் தாக்கம் வருத்தி நிற்க 2018.01.26 வெள்ளிக்கிழமை இரவு 08.15 மணிக்கு இவ்வுலகை விட்டு விண்ணுலகை நோக்கி பயணமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக 108 போற்றித் திருவுரு

## 01. சூரியன்

**கோள்களை ஆளும் சூரிய தேவே**
**ஞாலத் துயிர்கள் நன்மை பெறவே**
**இருளை நீக்கி அருளைப் பொழிவாய்**
**வேள்வியில் நின்று வினைகள் தீர்ப்பாய்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ஓங்கார | சூக்கும | உடலாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஓரா | ழித்தேர் | ஊர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஏழென் | குதிரை | ஏவினை | போற்றி | ஓம் |
| ஓம் | ஓர்முகம் | எண்கரம் | உடையாய் | போற்றி | ஓம் |
| ஓம் | இருந்தோட் | கமலம் | ஏந்தினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பொற்பட் | டுடையிற் | பொலிவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | வியாவி | ருதிஏழ் | விளங்குவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பன்னிரு | முனிதுதிப் | பாற்கரா | போற்றி | ஓம் |
| ஓம் | மழைபனிப் | பருவம் | மாற்றுவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | மூல | நெருப்பில் | முகிழ்த்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | வீதிமுன் | றிராசிபன் | னிரண்டாய் | போற்றி | ஓம் |
| ஓம் | சூரியா | வீரியா | சுகமருள் | போற்றி | ஓம் |

## 02. சந்திரன்

**சிவனின் கண்ணே சந்திர தேவே**
**அமுதம் பொழிந்து செழுமை தருவாய்**
**துன்பம் நீக்கி இன்பம் கூட்டி**
**யாகம் நின்று யோகம் அருள்வாய்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | சங்கரன் | முடிதவழ் | சந்திரா | போற்றி | ஓம் |
| ஓம் | திருமகள் | சோதரா | திவ்யா | போற்றி | ஓம் |
| ஓம் | சவுக்க | வடிவில் | இருந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | முத்து | விமான | வாகனா | போற்றி | ஓம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| ஓம் சக்கரம் | மூன்றுடைத் | தேராய் | போற்றி | ஓம் |
| ஓம் குருந்த | மலர்நிறக் | குதிரையாய் | போற்றி | ஓம் |
| ஓம் கலைவளர் | மதியே | கருணையே | போற்றி | ஓம் |
| ஓம் தேவர் | பிழிந்துணும் | அமுதே | போற்றி | ஓம் |
| ஓம் சக்தியை | நடுக்கொள் | மண்டலா | போற்றி | ஓம் |
| ஓம் வஞ்சம் | மோகினிக் | குறைத்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் நிலப்பயிர் | தழைக்கும் | நிலவே | போற்றி | ஓம் |
| ஓம் இருகண் | பார்வைச் | சுகமருள் | போற்றி | ஓம் |

## 03. செவ்வாய்

**செம்மை அருள்வாய் செவ்வாய்த் தேவா**
**நன்மை தருவாய் ஞாலம் வாழ**
**புன்மை போக்கிப் புவியோர்க் கின்பம்**
**வேள்வியில் நின்று விரைவே தாதா**

| | | | | |
|---|---|---|---|---|
| ஓம் பூதேவி | குமரா | பௌமா | போற்றி | ஓம் |
| ஓம் செந்நிற | உருவாய் | செவ்வாய் | போற்றி | ஓம் |
| ஓம் அன்ன | வாகனம் | அமர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் முக்கோ | ணவடிவ | இருக்கையாய் | போற்றி | ஓம் |
| ஓம் எண்பரித் | தேர்மிசை | இயல்வாய் | போற்றி | ஓம் |
| ஓம் தவத்தால் | உயர்பதம் | அடைந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் தட்சன் | யாகம் | தடுத்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் யோக | நெருப்புடை | உடலாய் | போற்றி | ஓம் |
| ஓம் மங்களம் | தரூஉம் | மங்களா | போற்றி | ஓம் |
| ஓம் அருங்கலை | வல்லாய் | ஆரல் | போற்றி | ஓம் |
| ஓம் வலிமை | ஊக்கம் | வழங்குவாய் | போற்றி | ஓம் |
| ஓம் அங்கா | ரகனே | அருள்வாய் | போற்றி | ஓம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. புதன்

அவிட்டம் பிறந்த புத பகவானே
தெவிட்டா வாழ்வும் தெய்வ அருளும்
போகம் செல்வம் பூமியில் அருள
யாகச் சுடரில் வேகம் வாவா.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | புதனெனும் | தாரை | புத்திரா | போற்றி | ஓம் |
| ஓம் | பசுமை | மேனி | கொண்டோய் | போற்றி | ஓம் |
| ஓம் | அம்பின் | வடிவில் | அமர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | வெண்காந் | தள்மலர் | விரும்பினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | குதிரை | வாகனாங் | கொண்டோய் | போற்றி | ஓம் |
| ஓம் | நால்பரித் | தேர்மிசை | அமர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | தவத்தால் | கோளென | உயர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | அசுவ | யாகம் | ஆற்றினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | இளையை | மணந்த | எழிலே | போற்றி | ஓம் |
| ஓம் | சிவனால் | சாபம் | நீங்கினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | இருக்கு | வேதத் | திருந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஞானமுங் | கல்வியும் | நல்குவாய் | போற்றி | ஓம் |

## 05. வியாழன்

மனம்போல் வாழ வியாழ தேவா
தனமும் நலமும் வளமுந் தருவாய்
கோள்தரு கொடுமை தீர்த்தே நன்மை
வேள்வியில் வந்து விரைவுட னீவாய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | வானவர் | குருவே | வியாழா | போற்றி | ஓம் |
| ஓம் | பொன்னிற | மேனிப் | புத்தேள் | போற்றி | ஓம் |
| ஓம் | நீண்ட | சவுக்கம் | நின்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | களிற்று | வாகன | முடையாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பொற்பரித் | தேரில் | பொலிந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | சர்ப்ப | யாகம் | தடுத்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | இந்திரன் | ஆள | இயம்பினாய் | போற்றி | ஓம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வச்சிரப் படைவலி தடுத்தாய் போற்றி ஓம்
ஓம் அசுரரைச் சபிக்கச் சூழ்ந்தாய் போற்றி ஓம்
ஓம் சேர்ந்தார்க் கின்பம் சேர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் கோள்தரு தீமை குறைப்பாய் போற்றி ஓம்
ஓம் கோடிநன் மைதரு குருவே போற்றி ஓம்

## 06. சுக்கிரன்

வெள்ளி ஒளிதரும் சுக்கிர தேவா
துள்ளும் இன்பம் துணிவும் தருவாய்
போகப் பொருளும் அருளும் திருவும்
யாகத் திருந்து பொழிவாய் நீயே.

ஓம் பிருகுபுத் திரனே சுக்கிரா போற்றி ஓம்
ஓம் வெள்ளி நிறத்தில் விளங்குவாய் போற்றி ஓம்
ஓம் ஐங்கோ ணாசனம் அமர்ந்தாய் போற்றி ஓம்
ஓம் வெண்டா மரைமலர் கொண்டோய் போற்றி ஓம்
ஓம் கருடவா கனத்தில் ஒளிர்வாய் போற்றி ஓம்
ஓம் பதின்பரித் தேர்மிசை வருவாய் போற்றி ஓம்
ஓம் சிவனால் ஒளிநிறம் பெற்றோய் போற்றி ஓம்
ஓம் கசனை உயிர்த்த கருணையே போற்றி ஓம்
ஓம் தண்டன் நாடு காடாக்கினாய் போற்றி ஓம்
ஓம் அசுரர் தோற்கச் சபித்தாய் போற்றி ஓம்
ஓம் பகீர் தன்னிடர் தீர்த்தாய் போற்றி ஓம்
ஓம் மிருகசஞ் சீவினி மந்திரா போற்றி ஓம்

## 07. சனி

சகலரும் பற்றும் சனீசுஸ்வரனே
சட்டென விட்டுச் சாந்தி தருவாய்
நீள்பாக் கியமும் நிம்மதி வாழ்வும்
வேள்விப் பயனாய் மீள்வித் தருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | சூரிய | பாலா | சுபமருள் | போற்றி | ஓம் |
| ஓம் | அஞ்சன | வண்ணா | சனியே | போற்றி | ஓம் |
| ஓம் | வில்வடி | வாசனம் | வியங்கினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | காக்கை | வாகனக் | கடவுளே | போற்றி | ஓம் |
| ஓம் | கருங்கு | வளைமல | ருகந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | எள்ளும் | வன்னியும் | ஏற்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | மேற்றிசை | நின்ற | மேலோய் | போற்றி | ஓம் |
| ஓம் | நளனைச் | சோதித் | தாண்டாய் | போற்றி | ஓம் |
| ஓம் | தேவரும் | பார்வையில் | தீய்த்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பற்றற் | றாரையும் | பற்றுவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | கலியென் | றொருபெய | ருடையாய் | போற்றி | ஓம் |
| ஓம் | தொழுதேன் | சனியே | தொடாதே | போற்றி | ஓம் |

## 08. இராகு

**கோளென உயர்ந்த இராகுக் கோவே**
**இருளை நீக்கி இன்னருள் புரிவாய்**
**பிடித்த நோவும் பின்பல் நஞ்சும்**
**யாகப் பயனால் போகச் செய்வாய்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | சிம்மிகை | மைந்தா | இராகுவே | போற்றி | ஓம் |
| ஓம் | கொடிவடி | வமர்ந்த | கோளே | போற்றி | ஓம் |
| ஓம் | ஆட்டு | வாகனம் | அமர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | தென்மேற் | றிசையில் | திகழ்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | மந்தா | ரைமலர் | மகிழ்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | உளுந்தும் | அறுகும் | உகந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | கரும்பாம் | புருவம் | கண்டாய் | போற்றி | ஓம் |
| ஓம் | நாலிரு | குதிரைத் | தேராய் | போற்றி | ஓம் |
| ஓம் | தேவர் | அமுதம் | உண்டோய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஒருடல் | இருகோ | ளானாய் | போற்றி | ஓம் |
| ஓம் | தவம்மேம் | பட்ட | தலையே | போற்றி | ஓம் |
| ஓம் | இராஜபோ | கம்தரு | ராகுவே | போற்றி | ஓம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. கேது


**கேட்டது கொடுக்கும் கேதுக் கோவே**
**ஊட்டும் நஞ்சும் நோயும் ஒழிப்பாய்**
**மீளாச் சொர்க்கம் ஞானம் கல்வி**
**வேள்விப் பயனாய் விரைந்தே தருவாய்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ராகுவி | னுடலே | கேதுவே | போற்றி | ஓம் |
| ஓம் | சிவனால் | தலையுயிர் | பெற்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | செம்பாம் | புருவை | வேண்டினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | முச்சில் | வடிவில் | முகிழ்த்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | செவ்வல்லி | மலர் | சேர்த்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | கொள்ளும் | தர்ப்பையுங் | கொண்டாய் | போற்றி | ஓம் |
| ஓம் | அரிவா | கனத்தில் | அமர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஆறு | குதிரைத் | தேராய் | போற்றி | ஓம் |
| ஓம் | வடமேற் | றிசையில் | நின்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | நீதி | நெறிசேர் | கேதுவே | போற்றி | ஓம் |
| ஓம் | தவத்தால் | கோள்நிலை | பெற்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஞானமும் | மோட்சமும் | நல்குவாய் | போற்றி | ஓம் |













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிய

# கந்தர் ஷஷ்டி கவசம்

## நேரிசை வெண்பா

### காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்கும் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளறரொலி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ஆறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதன் என்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்தலைவைத்து உன் இணையடி காக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூதாள்எனைக் கண்டாள் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து சூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணல்ஏரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சாவதுரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வாக் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவிதுணை

ஓம் சக்தி

**விநாயகர் துதி**

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றமும் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

**வேண்டுதல் கூற்று**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமங்கள் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லலோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்விசிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீர சக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னை காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவரு
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கி வர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப்புலவர்களின் பொன்மொழிகள்

## *கடவுள் வாழ்த்து*

01. அறிந்து கூறுவதற்கு உன் பெருமை கடினமானது என்பதை நாங்கள் நன்கு அறிந்திருக்கின்றோம்; ஆனாலும் உன்மேல் நாங்கள் கொண்டுள்ள ஆர்வம் மிகப் பெரியது. ஆகவே நாங்கள் எடுத்து விளக்க முடியாமல் திணறிக் கூறிய வார்த்தைகளை சிறுமையானவை என்று கருதி வெறுக்காமல் கேட்கவேண்டும்; கேட்டு இறைவனே நீ எங்களுக்குத் திருவருள் புரிய வேண்டும்.

பெயர் கானப்புலவர்

02. உன் அருமை பெருமை முழுவதையும் அளந்து தெரிவித்துக் கொள்வது உலகத்து உயிர்களுக்குக் கடினமானது. ஆதலால் தனக்கு உவமையாவோர் இல்லாத இறிவுடையவனே, உன் திருவடிகளை நினைத்து வந்தேன்.

*நக்கீரர்*

03. நெருப்புக்குள் சூடும் நீயே; பூவிற்குள் மணமும் நீயே; மாணிக்கத்தின் மணியொளியும் நீயே; சொல்லுக்குள் உண்மை நீயே; அறத்திற்குள் அன்பு நீயே; வீரத்திற்குள் வலிமை நீயே.

கடுவன் இளவெயினனார்

04. திருவடிகளைப்பற்றும் தூய உள்ளத்தோடு - நல்லதைச் செய்யும் கொள்கைப்பிடிப்புடன் - இன்பத்தைக் கடந்த நெறியில் நீ செல்ல விரும்பினால், உன் இனிய விருப்பம் நிறைவேற்றும்படி இப்பொழுதே நீ நினைத்த பேற்றினைப் பெறுவாய்.

*நக்கீரர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறம்

01. பசி இல்லாது ஒழிக; நோய் நெடுந்தொலைவு சென்று இல்லாமல் நீங்குக.

ஓரம் போக்கியார்

02. அறம் மிகவும் ஓங்குக; அறம் அல்லாத தீவினை ஒழிக.

ஓரம் போக்கியார்

03. ஆட்சி நீதி வழங்குக; திருட்டு ஒழிக.

ஓரம் போக்கியார்

04. நன்மை பெரிதும் ஓங்குக; தீமை இல்லாது ஒழிக.

ஓரம் போக்கியார்

05. மழை கிட்டுக; வளம் மிகவும் ஓங்குக.

ஓரம் போக்கியார்

06. சிறப்புடைய மரபால் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே செல்லும்.

கோவூர் கிழார்

07. வாழ்வதற்கு ஏதுவாகிய நல்வினை அல்லாமல் இறப்பில் மூழ்கும் காலத்தில் (சாகும் பொழுது) உயிருக்குத் துணையாகும் தெப்பம் வேறு இல்லை.

ஔவையார்

08. நல்ல செயல்களைச் செய்ய இயலாது போனாலும், தீய செயல்களைச் செய்வதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுங்கள். அதுதான் அனைவரும் விரும்புவது; அத்துடன் நல்ல நெறியில் செலுத்தும் வழியும் அதுதான்.

நரிவெரூஉத்தலையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து அணைந்த
***திருமதி காமாட்சி சுந்தரம்***
அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமது இல்லம் வந்து
உதவிகள் செய்தவர்களுக்கும் துக்கத்தில் பங்கு
கொண்டவர்களுக்கும், துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள்
வெளியிட்டோருக்கும் உள்ளூர், வெளிநாடுகளில் இருந்து
தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும்
ஈமக்கிரியைகளிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்து
கொண்டோருக்கும் மேலும் பல வழிகளில் எமக்கு உதவிபுரிந்த
உற்றார், உறவினர் நண்பர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும்,
இன்று நடைபெறும் வீட்டுக்கிரித்திய கிரியைகளிலும்
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து
கொண்டோருக்கும் கிரியைகளை நடாத்திய வேதியர்களுக்கும்
இம் மலரினை சிறப்புற அச்சிட்டு உதவிய
சிவா பதிப்பகத்தினருக்கும் எமது
மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org